ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1981/43 - 2016 අගෝස්තු මස 23 වැනි අඟහරුවාදා - 2016.08.23

*1981/43 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 23 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் அச்சீட்டு சேவைப் பிரமாணம் - திருத்தங்கள் இல. 3

*2014 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 12 ஆந் திகதிய 1892/40 ஆம் இலக்க, மற்றும் 2014 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 19 ஆந் திகதிய 1893/39 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் மற்றும் திருத்தஞ் செய்யப்பட்ட 2013 ஆம் ஆண்டு யூன் மாதம் 26 ஆந் திகதிய 1816/12 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் அச்சீட்டு சேவைப் பிரமாணக் கோவையின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தங்களை மேற்கொள்ள அரச சேவை ஆணைக்குழு கட்டளையிட்டுள்ளது.*

*அரச சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,*

எச். எம். காமினி செனெவிரத்ன,
செயலாளர்,
*அரச சேவை ஆணைக்குழு.*

*2016, திசெம்பர் 03.*

(i) *10.1* (iii) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு புதிய உப பிரிவொன்று உட்புகுத்தப்படுகின்றது.

*10.1* (iii) கட்டமைப்பு சார் நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் சேவை மூப்பு மற்றும் திறமைகளுக்கு புள்ளிகள் வழங்குவதன் மூலம் உள்வாரி விண்ணப்பதாரிகளை ஆட்சேர்ப்பு செய்தல்.

(ii) *10.1.1.* என்ற பந்தி நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக கீழே குறிப்பிட்டுள்ளவாறு புதிய பந்தி பதிலிடப்படுகின்றது.

உதவி அரசாங்க அழுத்தகர் (உற்பத்தி) பதவிக்காக

வெற்றிட எண்ணிக்கையில் 50% வெளிவாரி விண்ணப்பதாரர்களுள் முதலாம் இணைப்பின் *2.1* (i) இன் கீழ் குறிப்பிடப்பட்ட தகைமைகளுக்கேற்ப போட்டிப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை மூலம் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

வெற்றிட எண்ணிக்கையில் 25% உள்வாரி விண்ணப்பதாரர்களுள் முதலாம் இணைப்பின் 2.2 (i) இன் கீழ் குறிப்பிடப்பட்ட தகைமைக்கேற்ப மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை மூலம் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

வெற்றிட எண்ணிக்கையில் 25% உள்வாரி விண்ணப்பதாரர்களுள் முதலாம் இணைப்பின் 2.3 (i) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைக்கேற்பவும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட புள்ளிகள் வழங்கும் நடைமுறைக்கேற்பவும் கட்டமைப்பு சார் நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் சேவை மூப்பு மற்றும் திறமைகளை கருத்தில் கொண்டு வழங்கும் புள்ளிகளை அடிப்படையாக வைத்தும் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

ஏதேனும் பிரிவில் போதியளவு தகைமைகளுள்ள விண்ணப்பதாரிகள் இல்லாதவிடத்து அச்சந்தர்ப்பத்தில் அவ் எண்ணிக்கையை ஏனைய பிரிவிலிருந்து தெரிவு செய்ய அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு அதிகாரம் உண்டு.

(iii) 10.1.5 (vi) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு புதிய உப பிரிவொன்று உட்புகுத்தப்படும்.

10.1.5(vi) உள்வாரி விண்ணப்பதாரர்களை கட்டமைப்பு சார் நேர்முகப் பரீட்சை மூலம் ஆட்சேர்க்குமுகமாக முதலாம் இணைப்பின் 2.3 இல் தகைமையுள்ள உத்தியோத்தரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுவதுடன் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நடைமுறைக்கேற்ப கட்டமைப்பு சார் நேர்முகப் பரீட்சைமூலம் சேவை மூப்பு மற்றும் திறமைக்கு புள்ளிகள் வழங்கி திறமை ஒழுங்கமைப்பு மற்றும் வெற்றிட எண்ணிக்கைக்கு ஏற்ப அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

(iv) 10.3.9 அட்டவணையில் 1.4.6 என்ற பந்தி நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவாறு புதிய பந்தி பதிலிடப்படுகின்றது :-

| பதவி | வெளிவாரி விண்ணப்பதாரிகள் | உள்வாரி விண்ணப்பதாரிகள் | பயிற்சியாளர்கள் |
|---|---|---|---|
| 1. "ஓவ்செட் லித்தோ" அச்சீட்டு இயந்திர இயக்குநர் | 30% | 20% | 50% |
| 2. கணினி தட்டச்சு கோர்ப்பாளர் மற்றும் "அச்சீட்டு வடிவமைப்பாளர்" (Designer for Print) | 30% | 30% | 40% |
| 6. அச்சீட்டு தொழில்நுட்பவியலாளர் | - | 80% | 20% |

(v) 15.4 என்ற பந்தி நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள புதிய பந்தி பதிலிடப்படுகின்றது:-

15.4 இந்த சேவைப் பிரமாணம் அங்கீகாரம் பெற்று ஏழு (7) வருடங்கள் வரை பிரமாணத்தில் புதிய பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள எதிர்ப்படி கல்லச்சு இயந்திர இயக்குநர் (Letter Press) மற்றும் அச்சீட்டு நிறைவேற்றுநர் பதவிகளுக்காக தெரிவு செய்யப்படுகின்ற உள்வாரி விண்ணப்பதாரர்களுள் அச்சீட்டு நிறைவேற்றுநர் பதவிகளுக்காக தெரிவு செய்ததன் பின்னர் அரசாங்க அச்சக நிறுவகத்தினால் நடாத்தப்படும் புத்தகம் கட்டுதல் பற்றிய 6 மாதங்களுக்கு குறையாத பாடநெறியொன்றை பூர்த்தி செய்திருத்தல் மற்றும் எதிர்ப்படி கல்லச்சு இயந்திர இயக்குநர் (Letter Press) பதவிக்கு தெரிவானதன் பின் திணைக்களத்தினால் நடாத்தப்படும் செய்முறை பரீட்சையில் சித்தி பெறுதல் என்பன இப் பதவிகளை நிரந்தரமாக்குவதற்கு போதுமான தகைமைகளாகும்.

மேலும் இப் பந்தியின் கீழ் "ஓவ்செட் லித்தோ" அச்சீட்டு இயந்திர இயக்குநர் பதவிக்கு தெரிவு செய்யப்படுகின்ற உள்வாரி விண்ணப்பதாரர் தமது பதவி நிரந்தரமாக்கப்படுவதற்கு அரசாங்க அச்சக நிறுவகம் நடாத்தும் 6 மாதங்களுக்கு குறையாத "லித்தோ" பாடநெறியை பூர்த்தி செய்திருத்தல் போதுமானது. இந்த பிரமாணம் அங்கீகரிக்கப்பட்டு ஏழு (7) வருடங்களின் பின்னர் மேற்கூறப்பட்ட பதவிகளுக்கு ஆட்சேர்க்கையில் NVQ 5 ஆம் மட்டம் இருப்பின் இந்த பிரமாணத்தில் 10.3 பந்தியின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைதல் வேண்டும்.

(vi) முதலாம் இணைப்பின் 2.2 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தலைப்பை நீக்கி அதற்குப் பதிலாக கீழ்க் குறிப்பிடப்பட்ட புதிய தலைப்பு பதிலிடப்படுகின்றது.

2.2 மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சைகள் மூலம் உள்ளக விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்வதற்கான தகைமைகள்

(vii) முதலாம் இணைப்பின் 2.3 இன் கீழ் , கீழ்க்குறிப்பிடப்பட்டவாறு புதிய உப பிரிவொன்று உட்புகுத்தப்படும்.

2.3 கட்டமைப்பு சார் நேர்முகப் பரீட்சை ஒன்றின் மூலம் உள்வாரி விண்ணப்பதாரர்களை தெரிவு செய்வதற்கான தகைமைகள்.

1. உதவி அரசாங்க அழுத்தகர் (உற்பத்தி)

(அ) அச்சீட்டு சேவையில் தலைமை மேற்பார்வையாளர் பதவியில் ஐந்து (5) வருட செயற்பாட்டு சேவைக் காலப் பகுதியை கொண்டுள்ளதுடன் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பவியல்) சேவை தரத்தில் I ஆம் வகுப்பு உத்தியோகத்தராக இருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று ஐந்து (5) வருடங்கள் திருப்திகரமான சேவைக்காலப் பகுதியை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(viii) முதலாம் இணைப்பின் 3(iii) என்ற பந்தி நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக கீழ்க் குறிப்பிடப்பட்ட பந்தி பதிலிடப்படுகின்றது.

3 (iii) இலங்கை அச்சீட்டு நிறுவனத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு/வெளிநாட்டு நிறுவகத்தில் அச்சீட்டு தொழில்நுட்பம் பற்றிய பாடநெறியை பூர்த்தி செய்து சான்றிதழை பெற்றிருத்தல்.

(ix) முதலாம் இணைப்பின் 4.1.1 (ஆ), 4.2.1(ஆ), 4.6.1 (ஆ) என்ற பந்திகளை நீக்கி விட்டு அதற்குப் பதிலாக கீழே குறிப்பிடப்பட்ட புதிய பந்தி பதிலிடப்படுகின்றது.

4.1.1 (ஆ) அங்கீகரிக்கப்பட்ட நிறுவகமொன்றில் உரிய துறையில் 5 வருடங்களுக்கு குறையாத அனுபவம் பெற்றிருத்தல்.

4.2.1 (ஆ) அங்கீகரிக்கப்பட்ட நிறுவகமொன்றில் உரிய துறையில் 5 வருடங்களுக்கு குறையாத அனுபவம் பெற்றிருத்தல்.

4.6.1 (ஆ) அங்கீகரிக்கப்பட்ட நிறுவகமொன்றில் உரிய துறையில் 5 வருடங்களுக்கு குறையாத அனுபவம் பெற்றிருத்தல்.

(x) முதலாம் இணைப்பின் 4.1.3 என்ற பந்தியை நீக்கி அதற்குப் பதில் கீழ்க் குறிப்பிடப்பட்ட புதிய பந்தி பதிலிடப்படுகின்றது.

4.1.3 உள்வாரி விண்ணப்பதாரிகளுக்காக,

(அ) திணைக்களத்தில் 15 வருடங்களுக்கு குறையாத செயற்பாட்டு சேவைக் காலத்தை பூர்த்தி செய்துள்ள அச்சீட்டு அலுவலக உதவியாளர் சேவையின் வகுப்பு II அல்லது அதற்கு மேலான வகுப்பிலுள்ள அலுவலராக இருத்தல்.

அல்லது

(ஆ) திணைக்களத்தில் 10 வருடங்களுக்கு குறையாத செயற்பாட்டு சேவைக்காலத்தை பூர்த்தி செய்துள்ள அச்சீட்டு அலுவலக உதவியாளர் வகுப்பு II அல்லது அதற்கு மேலான வகுப்பிலுள்ள அலுவலராக இருத்தல் மற்றும் இலங்கை அரசாங்க அச்சக நிறுவகத்தினால் நடாத்தப்படுகின்ற “லித்தோ” பற்றிய பாடநெறியில் சித்தி பெற்றிருத்தல்.

அல்லது

(இ) அரசாங்க அச்சகத்தில் எதிர்ப்படி கல்லச்சு இயந்திர இயக்குநராக (Letter Press) ஆறு (6) வருட கால அனுபவத்தை பெற்றிருத்தல்.

(xi) முதலாம் இணைப்பின் 4.1.4 இன் கீழ், கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு புதிய உப பிரிவொன்று உட்பகுத்தப்படும்.

4.1.4 இப்பதவிகளுக்காக ஆட்சேர்த்துக் கொள்ளப்படும் போது வெளிவாரி விண்ணப்பதாரிகளிடையே 30% உம் உள்வாரி விண்ணப்பதாரிகளிடையே 20% உம் பயிலுநர்களிடையே 50% என்ற சதவீதத்துடன் ஆட்சேர்த்துக் கொள்ளப்படுவர். எனினும் ஏதேனும் பிரிவில் போதுமானளவு தகைமைகளுடன் விண்ணப்பதாரிகள் இல்லாதிருக்கும் சந்தர்ப்பத்தில் அவ்வெண்ணிக்கையை ஏனைய பிரிவிலிருந்து தெரிவு செய்ய அரசாங்க அழுத்தகருக்கு அதிகாரம் உண்டு.

(xii) முதலாம் இணைப்பின் 4.2.2 என்ற பந்தி நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக கீழ்க் குறிப்பிடப்பட்ட புதிய பந்தி பதிலிடப்படுகின்றது.

4.2.2 உள்வாரி விண்ணப்பதாரிகளுக்காக,

(அ) திணைக்களத்தில் பதினைந்து (15) வருடத்திற்கு குறையாத செயற்பாட்டுசேவைக் காலத்தை பூர்த்தி செய்துள்ள அச்சீட்டு அலுவலக உதவியாளர் தரம் II அல்லது அதற்கு மேற்பட்ட தரத்திலுள்ள அலுவலராக இருத்தல்.

(xiii) முதலாம் இணைப்பின் 4.5.1 என்ற பந்தி நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக புதிய பந்தி பதிலிடப்படுகின்றது.

4.5.1 வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்காக,

(அ) கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சா.த.) பரீட்சையில் கணிதம்/சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி உட்பட ஆகக்குறைந்தது நான்கு (4) பாடங்களில் திறமை சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (6) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட நிறுவகமொன்றில் உரிய துறையில் ஐந்து (5) வருடங்களுக்கு குறையாத அனுபவம் பெற்றிருத்தல்.

(இ) துறைக்குரித்தான NVQ 4 ஆம் மட்ட தேர்ச்சி சான்றிதழ் பெற்றிருத்தல்.

(xiv) முதலாம் இணைப்பின் 4.5.2 என்ற பந்தி நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக புதிய பந்தி பதிலிடப்படுகின்றது.

4.5.2 உள்வாரி விண்ணப்பதாரிகளுக்காக -

(அ) கல்விப் பொதுத் தராதர (சா. த.) பரீட்சையில் கணிதம்/சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி உட்பட இரண்டு பாடங்களில் திறமை சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (6) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

(ஆ) (i) கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர்தர) பரீட்சையில் சிங்களம்/உடன் ஒரே தடவையில் எல்லா பாடங்களிலும் (சாதாரண பொது பரீட்சையை தவிர்த்து) சித்தி பெற்றிருத்தல் (பழைய பாடத்திட்டத்தின் கீழ் ஒரே அமர்வில் மூன்று (3) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் போதுமானதாகும்).

(ii) (ஆ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள கல்வி பொது தராதரப் பத்திர (உயர்தரம்) பரீட்சையில் ஆங்கில மொழி பாடத்தில் சித்தி பெறாத வேளையில் அப்பாடத்தில் க. பொ. த. (சா.த.) பரீட்சையில் எத்தடவையிலாவது ஆங்கிலப் பாடத்தில் திறமை சித்தி பெற்றிருத்தல்.

(xv) முதலாம் இணைப்பின் 4.5.3 என்ற பந்தியை நீக்கி அதற்குப் பதில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள புதிய பந்தி பதிலிடப்படுகின்றது.

4.5.3 பயிலுநர்களுக்காக -

(அ) கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சா. த.) பரீட்சையில் கணிதம்/சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி உட்பட ஆகக்குறைந்தது நான்கு (4) பாடங்களில் திறமை சித்திகளுடன் ஒரே தடவையில் ஆறு (6) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

(ஆ) (i) கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர்தர) பரீட்சையில் ஒரே தடவையில் எல்லா பாடங்களிலும் (சாதாரண பொது பரீட்சையை தவிர்த்து) சித்தி பெற்றிருத்தல் (பழைய பாடத்திட்டத்தின் கீழ் ஒரே அமர்வில் மூன்று (3) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் போதுமானதாகும்).

(ii) (ஆ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள கல்வி பொது தராதரப் பத்திர (உயர்தரம்) பரீட்சையில் சிங்களம்/ தமிழ் மற்றும் ஆங்கில மொழி பாடத்தில் சித்தி பெறாத வேளையில் அப்பாடத்தில் க. பொ. த. (சா.த.) பரீட்சையில் எத்தடவையிலாவது "ஏ" தரத்தில் சித்தி பெற்றிருத்தல்.

(xvi) முதலாம் இணைப்பின் 4.6.2 என்ற பந்தியில் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளவாறான புதிய பிரிவொன்று உட்புகுத்தப்படும்.

4.5.4 இப்பதவிகளுக்காக ஆட்சேர்த்துக்கொள்ளப்படும் போது வெளிவாரி விண்ணப்பதாரர்களிடையே 30% உம் உள்ளக விண்ணப்பதாரர்களிடையே 30% உம் பயிலுநர்களிடையே 40% முமான சதவீதத்துடன் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும். எனினும் ஏதேனும் பிரிவில் போதுமானளவு தகைமைகளுடன் விண்ணப்பதாரிகள் இல்லாதிருக்கும் சந்தர்ப்பங்களில் அவ்வெண்ணிக்கையை ஏனைய பிரிவிலிருந்து ஆட்சேர்க்க அரசாங்க அழுத்தகருக்கு அதிகாரம் உண்டு.

(xvii) முதலாம் இணைப்பின் 4.6.2 வின் கீழ், கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவாறு புதிய உப பிரிவொன்று உட்புகுத்தப்படும்.

4.6.2 (ஆ) - திணைக்களத்தில் 10 வருடங்களுக்கு குறையாத செயற்பாட்டு சேவைக் காலத்தை பூர்த்தி செய்துள்ள அச்சீட்டு அலுவலக உதவியாளர் II ஆம் வகுப்பு அல்லது அதற்கு மேற்பட்ட அலுவலராக இருத்தல் மற்றும் இலங்கை அச்சக நிறுவகத்தில் "புத்தகம் கட்டுதல்" பற்றிய பாடநெறியை பூர்த்தி செய்து சான்றிதழ் பெற்றிருத்தல்.

(xviii) முதலாம் இணைப்பின் 4.7.2 என்ற பந்தி நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள புதிய பந்தி பதிலிடப்படுகின்றது.

4.7.2 பயிலுநர்களுக்காக

(அ) க. பொ. த. (சா.த.) பரீட்சையில் கணிதம், சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி உட்பட நான்கு பாடங்களில் குறைந்த பட்சம் திறமை சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (6) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

(ஆ) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் எல்லா பாடங்களிலும் (சாதாரண பொது பரீட்சையை தவிர்த்து) ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல் (பழைய பாடத்திட்டத்தின் கீழ் ஒரே அமர்வில் மூன்று (3) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் போதுமானதாகும்).

(xix) முதலாம் இணைப்பின் 4.7.3 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள புதிய உப பிரிவொன்று உட்புகுத்தப்படும்.

4.7.3

(அ) இந்த உள்வாரி விண்ணப்பதாரர்களுள் 80% உம், பயிலுநர்களுள் 20% என்ற விகிதாசாரத்தில் அடிப்படையில் ஆட்சேர்த்துக் கொள்ளப்படும். எனினும் ஏதேனும் பிரிவில் போதுமானளவு தகைமைகளுடன் விண்ணப்பதாரிகள் இல்லாத சந்தர்ப்பத்தில் அவ்வெண்ணிக்கையை ஏனைய பிரிவுகளிலிருந்து தெரிவு செய்ய அரசாங்க அழுத்தகருக்கு அதிகாரம் உண்டு.

(ஆ) இப்பதவிகளுக்கான உள்வாரி விண்ணப்பதாரிகளை தெரிவு செய்தல் கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் நடைபெறும். கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சை பற்றிய பிரமாணத்தின் 10.3.8 பிரிவின் ஏற்பாடுகளுக்கு உரித்தாகும்.

(xx) முதலாம் இணைப்பின் 5ஆம் பந்தி நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள புதிய பந்தி பதிலிடப்படுகின்றது.

5. மேலே 4.1.1 (ஆ), 4.2.1 (ஆ), 4.6.1 (ஆ) பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட 5 வருட சேவைக் காலத்தினுள் விண்ணப்பதாரிகளின் சேவைக்கான சேமலாப நிதியத்திற்கு/ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்பு செய்துள்ளார்களென உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

(xxi) 10.2.6 ஆம் பந்தி நீக்கப்படுகின்றது.

(xxii) 1.3.14(iv) எனும் பந்தி நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் புதிய பந்தி உட்புகுத்தப்படுகின்றது.

தேசிய தொழில் தகைமைப் (NVQ) பரீட்சைகளில் தகுந்த சித்தி பெறும் விண்ணப்பதாரிகளுக்கு உரிய தகைமைச் சான்றிதழ் வழங்கப்படும்.

09 - 284

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.